11. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014-2015, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014–2015 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause *(1)* of Article *205*, read with Clause *(3)* of Article *203*, of the Constitution of India, I, R.N. Ravi, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year *2014–2015* in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

14. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014–2015, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014–2015 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014–2015 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 11–10–2023 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2014–2015 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.